# யாழ்ப்பாண நூலகத்திற்கு ஓர் இரங்கற்பா...

சுந்தர் கணேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண நூலகத்திற்கு
# ஓர் இரங்கற்பா...

சுந்தர் கணேசன்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண நூலகத்திற்கு ஓர் இரங்கற்பா...
சுந்தர் கணேசன்
ஜூன் 2024

வெளியீடு: ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்
நான்காம் தளம், ஒங்கிணைந்த பணிமனை
மூன்றாவது குறுக்கு தெரு, மைய தொழில்நுட்ப வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

முதல் பதிப்பு: பாரதி புத்தகாலயம், ஏப்ரல் 2017

கட்டுரை மூலம்:
https://www.himalmag.com/comment/requiem-jaffna-library

அட்டைப் பட வடிவமைப்பு:
ரஞ்சித் ரூஸோ

விலை: ₹30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

பேராசிரியர் வீ. அரசு,
பேராசிரியர் ஆ. இரா. வேங்கடாசலபதி,
திரு பத்மநாப ஐயர்,
திருமதி பரராஜசிங்கம்,
திரு சோமீதரன்,
திருமதி ஸ்ரீகாந்தலஷ்மி,
திரு தனபாலசிங்கம்,
நூலகம் அறக்கட்டளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1933 இல் ஜெர்மனியில் நாஜிகளுக்கு எதிரானவை எனக் கருதப்பட்ட பல்லாயிரக்கணக்கான நூல்கள் நாஜிகளால் எரிக்கப்பட்டன. அதே ஆண்டில்தான் யாழ்ப்பாணத்தில் ஒரு நூலகத்தை உருவாக்கவேண்டும் என்ற எண்ணமும் உதயமானது. யாழ்ப்பாணப் பொது நூலகம் 1981இல் தீக்கிரையாக்கப்படாதிருந்தால் 2008இல் வைரவிழாவைக் கொண்டாடியிருக்கும். மாறாக, அந்தச் சோக நிகழ்வின் 43வது ஆண்டு நிறைவை 2024 ஜூன் குறிப்பதாக அமைகிறது.

1933ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார நிலை மோசமாக இருந்தது. வேலையில்லாத் திண்டாட்டம் உச்சத்தில் இருந்தது. இந்த இக்கட்டான சூழ்நிலைகளுக்கு நடுவே யாழ்ப்பாணத்தில் மாவட்ட நீதிமன்றத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த கே.எம். செல்லப்பா என்பவர் ஓர் இலவச தமிழ் நூலகம் (A Central Free Tamil Library) அமைப்பதற்கான வேண்டுகோளை ஒரு சுற்றறிக்கை மூலம் முன்வைத்தார். இதற்கு ஆதரவு கேட்டு தொழிலாளர்களையும், அவர்களின் சங்கங்களையும், ஆசிரியர்களையும், நூலாசிரியர்களையும், வர்த்தகம்-தொழில் நடத்துவோரையும் அணுகினார். இந்த நூலகம் தமிழ் நூல்கள் மட்டுமின்றி ஏனைய மொழி நூல்களையும் கொண்டதாக இருக்கவேண்டும் என்பது இவரது எண்ணம். "யாழ்ப்பாணத்தில் தமிழ் நூலகம்" என்ற கருத்து வேகமாகப் பரவியது. இதைத் தொடர்ந்து, இதில் ஆர்வம் கொண்டவர்களின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்களை மூல உறுப்பினர்களாகக் கொண்டு நூலகம் அமைக்கப்படும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதற்கான ஆதரவு பல இடங்களிலிருந்து பணமாகவும் பொருட்களாகவும் வந்தது. 1934 ஆகஸ்ட் 1ஆம் நாளில் யாழ்ப்பாணத்தின் மருத்துவமனைத் தெருவில் ஒரு வாடகைக் கட்டடத்தில் 844 நூல்களையும் 30 இதழ்களையும் கொண்ட நூலகம் திறக்கப்பட்டது. தில்லிப் பல்கலைக்கழக நூலகத் தலைவராக இருந்த 'இந்திய நூலகவியலின் தந்தை' என அழைக்கப்படும் எஸ்.ஆர். ரங்கநாதன் இந்நூலக அமைப்பிற்கு ஆலோசனை வழங்கினார். அருட்தந்தை லாங் என்ற பிரிட்டிஷ் திருச்சபை குருதான், இந்நூலகத்தின் ஆரம்பக்கால வெற்றிக்கு உதவியவர். இவர் யாழ்ப்பாண நூலகச் சங்கத்தை (Jaffna Library Society) அமைப்பதற்கும் உதவினார். இதற்காக பிரிட்டிஷ் நூலகம், தில்லிப் பல்கலைக்கழக நூலகம் போன்றவைகளிடமிருந்து உதவி பெற்றார். அருட்தந்தை லாங், யாழ்ப்பாண நகரில் ஒரு மத்திய நூலகத்தையும், யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள நகரங்கள், கிராமங்கள் அனைத்திலும் கிளை நூலகங்களையும் தொடங்குவதற்குத் திட்டங்களை வகுத்தார். இதுமட்டுமின்றி நடமாடும் நூலகங்களை உருவாக்கவும் திட்டமிட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்தில் நூல்கள் சேகரிப்பு பெருகத் தொடங்கியதும் இடப்பற்றாக்குறையினால் இந்நூலகம் பல கட்டடங்களுக்கு மாற்றப்பட்டது. நிரந்தரமான நூலகக் கட்டடத்திற்கான தேவையை அறிந்து 1953இல் யாழ்ப்பாண நகரின் மையப் பகுதியில் நூலகக் கட்டடம் கட்டும் வேலை தொடங்கியது. இந்தக் கட்டடம் 1959 அக்டோபர் 11இல் திறக்கப்பட்டது. இந்நூலகம் அடுத்தடுத்த வந்த யாழ்ப்பாண மேயர்களின் ஆதரவினாலும் லாட்டரிகள், பண்பாட்டு விழாக்கள், நாடகங்கள் மூலமாகத் திரட்டப்பட்ட நிதி மூலமாகவும் தொடர்ந்து வளர்ந்தது.

யாழ்ப்பாண நூலகம் அப்பொழுது ஒரு நிறுவனம் என்பதைத் தாண்டி ஓர் இயக்கமாகவே கருதப்பட்டது. இந்நூலகம் 1960ஆம் ஆண்டு வாக்கில் 16,000 நூல்களும் தமிழ், ஆங்கில இதழ்களின் ஒரு பெருந்தொகுப்பும் கையெழுத்துப் பிரதிகளின் தொகுப்பும் கொண்டிருந்தது. இவற்றில், இலங்கையின் தொடக்க கால காலனிய ஆட்சி பற்றிய நூல்கள், தமிழ்மொழியின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம் முதலியவை குறிப்பிடத்தக்க ஆவணங்களாகும். 1959இல் இந்த நூலகம், 15, 910 சதுர அடி பரப்பில் அமைந்திருந்தது. இது கொழும்பு பெருநகராட்சி நூலகத்தைவிட பெரியதாகும். கட்டுரைப் பிரிவு, புதினங்கள் பிரிவு, குழந்தைகளுக்கான நூல் பிரிவு, அறிவுப் பெருக்கப் பிரிவு, நூல்கள் கொடுத்து வாங்கும் பிரிவு, மாநாட்டு அரங்கம், கலைக்காட்சிக் கூடத்துடன் ஒரு கண்காட்சி அரங்கம் முதலியவற்றை இந்நூலகம் கொண்டிருந்தது. அப்பொழுது இந்நூலகத்தில் 33 ஊழியர்கள் பணியாற்றினர். 17,000-த்திற்கும் மேலானவர்கள் உறுப்பினர்களாக இருந்தனர். மேலும் அப்போது வாழ்ந்த பி. குமாரசாமி போன்ற தமிழ் அறிஞர்களின் ஆதரவையும் பெற்றிருந்தது.

**தீக்கிரை**

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கையின் தென்பகுதியில் சிங்களர்களின் புத்தமத தேசியவாதம் புத்தாக்கம் பெற்றது. இந்நிலையில், இலங்கையின் வடபகுதியில் வாழும் தமிழர்கள் தங்களுடைய மொழி, பண்பாடு, இந்துமத நம்பிக்கை ஆகியவற்றுடன் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு ஒற்றுமையுடன் இருந்து வந்தனர். 1980ஆம் ஆண்டுகளில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலை பின்பு இனமோதல்களில் வெடித்தது. இம்மோதல் இருதரப்பிற்கும் பேரழிவை உண்டாக்கியது. இதைத் தொடர்ந்து 1981 ஜூன் 1ஆம் நாள் சிங்களக் காவல்படைகள் யாழ்ப்பாண நூலகத்திற்கு தீ வைத்தன. இந்நிகழ்வு நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு கல்வியாளர் நான்சி மவுரி நூலகத்திற்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து கீழ்க்கண்டவாறு பதிவு செய்தார்.

"உயர் மட்ட சிங்களப் பாதுகாப்புப்படை அதிகாரிகளும், அமைச்சர்கள் சிரில் மாத்யூ, காமினி திஸநாயகே ஆகியோரும் (இவர்கள் இருவரும், தாங்கள் சிங்கள மேலாதிக்கவாதிகள் என அவர்களே ஒப்புக் கொண்டுள்ளனர்) அன்று யாழ்ப்பாண நகரில்தான் இருந்தனர். இவர்களுடன் சீருடை அணிந்த பாதுகாப்புப் படையினரும் சீருடையணியாத குண்டர்களும் மிக தீவிரமாகத் திட்டமிட்டு அழிவு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இவர்கள் 95,000 நூல்களையும் விலைமதிப்பற்ற கையெழுத்துப் பிரதிகளையும் கொண்ட யாழ்ப்பாண நூலகம், ஒரு இந்துக் கோவில், தமிழ் தினசரியான 'ஈழநாடு' பத்திரிகையின் அலுவல இயந்திரங்கள் ஆகியவற்றைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிவைத்துத் தாக்கினர்."

எரியும் நெருப்பிலிருந்து ஒரு காகிதத்தைக்கூட காப்பாற்ற சிங்களக் காவலர்கள் அனுமதிக்கவில்லை. இதனால் ஒரேயொரு படி மட்டுமே இருந்த யாழ்ப்பாண வைபவம் (யாழ்ப்பாண வரலாறு) நூல், ராமாயண நூலின் மிகச் சிறிய பதிப்பு, 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மிஷனரிமார்கள் வெளியிட்ட இரு மொழிப் பத்திரிக்கையான உதயதாரகையின் நுண்படப்பிரதிகள் உள்ளிட்ட அரிய ஆவணங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன. நூலகம் தீக்கிரையான செய்தியை மறுநாள் அறிந்த கல்வியாளர் அருட்தந்தை டேவிட் என்பவர் அதிர்ச்சியால் உயிரிழந்தார்.

தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ஏ. அமிர்தலிங்கம், இது குறித்து இலங்கை நாடாளுமன்றத்தில் இந்தத் தீவைப்புக்கு சதித்திட்டம் செய்தவர்களின் பெயர்களை வெளியிடுமாறு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார். எனினும் அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனேயின் அரசாங்கம், இது குறித்து விசாரணை நடத்துவதில் எந்த அக்கறையும் காட்டவில்லை.

தமிழ்நாட்டு நாளிதழ்கள் பல நாட்களுக்கு இதுகுறித்து எந்தச் செய்தியையும் வெளியிடவில்லை. இதற்கு யாழ்ப்பாணத்தின் செய்தி தணிக்கை காரணமாக இருந்திருக்கலாம். 1981 ஜூன் 6ஆம் தேதி இந்து நாளிதழ், ஒரு பொது நூலகம், அதில் இருந்த அனைத்து நூல்களுடன் எரிக்கப்பட்டது என்ற செய்தியை வெளியிட்டது. ஜூன் 13ஆம் தேதி வெளியிட்ட செய்தியில் அந்நூலகத்தில் 95 ஆயிரம் நூல்கள் இருந்ததாகவும் அவற்றில் சில நூல்கள் அபூர்வமானவை என்றும் நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தவை என்றும் அமிர்தலிங்கம் கூறியதாகத் தெரிவித்தது. சென்னையிலிருந்து வெளிவரும் தமிழ் தினசரியான தினமணி, 1981 ஜூன் 3இல் தீ வைப்பு குறித்து செய்தி வெளியிட்டது. யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த கலவரங்கள், அதைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவு குறித்து வெளியான செய்திகளினால் இந்நூலகம் எரிக்கப்பட்ட செய்தி இருட்டடிப்பு செய்யப்பட்டது.

பின்னர், ஜூன் 5இல் வெளியான இதழில்தான் யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்கு ஏற்பட்ட இழப்புக் குறித்த செய்தியைத் தினமணி நாளிதழ் வெளியிட்டிருந்தது. ஆனால் இச்செய்தி, இழப்பின் தன்மையை முழுமையாக வெளிபடுத்தவில்லை. யாழ்ப்பாண நகரத்திற்கு வெளியே இருந்தவர்கள், தமிழ்ப் பண்பாட்டுத் தரவுகளுக்கு ஏற்பட்ட இழப்பை அறியாதவர்களாகவே இருந்தனர். ஆனால், இந்தப் பேரிழப்பு ஒரு காலக் கட்டத்தில் பொதுமக்களின் கவனத்திற்கு வரவேண்டியதாயிற்று.

1983இல் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் சர்வதேசப் பத்திரிகைகளில் முக்கியத்துவத்தைப் பெற்றன. எதிர்க்கட்சித் தலைவர் அப்பாபிள்ளை அவர்கள் "மக்களை எரிப்பது என்பது கொலையாகும். நூல்களை எரிப்பது என்பது தமிழ்ப் பண்பாட்டைக் கொலை செய்வதாகும்" என்று 1984ஆம் ஆண்டில் நூலகத்தை மீண்டும் திறப்பதற்கு நடந்த நிகழ்ச்சியில் கூறினார். இதற்கு பிறகு பல நாடாளுமன்ற உறுப்பினர்களும், பேராசிரியர்களும் வெளிநாட்டு வாழ் இலங்கைத் தமிழர்களும், மாவட்டக் குழுக்களும் எண்ணற்ற மதச்சார்பற்ற மற்றும் மத அமைப்புகளும், நூலகத்தை மீண்டும் கட்டுவதற்கு ஆதரவு அளிப்பதில் ஒன்று கூடினார்கள். இந்த மறுகட்டுமானப் பணிகளுக்கு இலங்கை அரசு ரூபாய் 20 லட்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்குமாறு தமது அரசாங்கத்திற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனே உத்தரவிட்டதன்மூலம் தனது கௌரவத்தை ஓரளவு காப்பாற்றிக் கொண்டார்.

எனினும், நூலகத்திற்கான இந்த மறுகட்டுமான முயற்சிகளின் பயன்கள் குறுகிய காலத்திற்குரியவையாகவே இருந்தன. 1985இல் நூலகத்திற்கு அருகில் இருந்த காவல்நிலையத்தைத் தமிழ் வன்முறையாளர்கள் தாக்கினர். இதனைத் தொடர்ந்து அரசாங்கப்படைவீரர்கள் மீண்டும் கட்டப்பட்டுவந்த நூலகக் கட்டடத்திற்குள் நுழைந்து குண்டுகளை வைத்து வெடிக்கச் செய்தனர். இதில் தமிழ்நாடு அரசாங்கம் வழங்கியிருந்த 7800 நூல்கள் உட்பட யாழ்ப்பாண நூலகத்தின் நூல்கள் அனைத்தும் மீண்டும் தீக்கிரையாயின. இதன்பின்னர் நூலக கட்டடம் கைவிடப்பட்டது....

இது யாழ்ப்பாண மக்களுக்கு, குறிப்பாக அவர்களின் பண்பாட்டிற்கு விழுந்த மிகப்பெரிய அடியாகும். நூலகம் பற்றிய கேள்வி ஒன்றுக்கு, சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் வரலாற்றுப் பேராசிரியர் ஏ.ஆர். வேங்கடாசலபதி பதிலளிக்கையில் யாழ்ப்பாண நூலக அழிவு குறித்துப் பேசினார். அப்போது அவர், "அது ராணுவ ஆக்கிரமிப்புடன் நிகழ்ந்த பண்பாட்டுத் தாக்குதல்" என்று குறிப்பிட்டார்.

## பழுது பார்ப்பும் நம்பிக்கை இழப்பும்

அன்று நூலகத்தை மீண்டும் கட்டுவது குறித்து இரண்டு வேறுபட்ட கருத்துக்கள் நிலவின. ஒன்று, யாழ்ப்பாணப் பொது நூலகத்தை மீண்டும் முன்பு இருந்ததுபோல் கட்டுவது. இரண்டு, நூலகத்தை எரித்த அவர்களின் இனவெறியின் அடையாளமாக அதனை அப்படியே விட்டுவிட்டு எரிக்கப்பட்ட பழைய நூலகக் கட்டடத்திற்கு அருகிலேயே ஒரு புதிய கட்டடத்தை எழுப்புவதாகும். பெரும்பான்மையான தமிழ் அறிவாளர்களும், கலைஞர்களும் இரண்டாவது கருத்தோட்டத்தையே கொண்டிருந்தனர். ஆனால் இலங்கை அரசாங்கமோ இந்த நிகழ்வை மறைப்பதற்கே விரும்பியது. இதன் தொடர்ச்சியாக அரசாங்கம் பழைய நூலகக் கட்டடத்தைப் பழுது பார்ப்பதென்ற வழிமுறையைத் தேர்வு செய்தது. குண்டுகள் பாய்ந்ததினால் ஏற்பட்ட துளைகள் மெழுகிப்பூசப்பட்டன. எரித்ததன் அடையாளங்கள், வெள்ளையடித்து மறைக்கப்பட்டன. அரசாங்க நிதி வந்துகொண்டிருந்தாலும்கூட புதுப்பிக்கப்பட்ட கட்டடம் 2003இல்தான் திறக்கப்பட்டது.

ஆனால், அது ஒரு கட்டடமாகத்தான் இருந்ததேயன்றி முழுமையானதொரு நூலகமாக இருக்கவில்லை. இது குறித்து முன்னாள் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் வீ. அரசு அவர்கள், "இந்த நூலகத்தை, இனி தமிழ்ப் பண்பாட்டு மற்றும் வரலாற்று மையமாக யாரும் பார்க்கப் போவதில்லை" என்று குறிப்பிடுகிறார். அதற்குச் சான்றாக, சென்னையில் உள்ள ஆராய்ச்சி மையமான ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்கு அளித்த 3000 அரிய நூல்கள், அந்த நூலகத்தைச் சென்றடைந்ததற்கான பதிவு எதுவும் இல்லை.

2002இல் யுனெஸ்கோவின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் நிலைமையையும் அதன் தேவைகளையும் மதிப்பீடு செய்வதற்காகச் சென்றிருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் அப்போது போர் நிறுத்தம் செய்யப்பட்டிருந்த சமாதான காலமாக இருந்தது. நான் பயணித்த விமானம் பலாலியில் இறங்கியதும் நான் மற்றவர்களோடு விமான ஓடுதளத்தில் காத்திருந்தேன். இரண்டு இராணுவ வாகனங்கள், எங்களுடைய பைகளை எடுப்பதற்கு வந்தன. பின்பு, விமானத்தில் வந்தவர்கள் அனைவரும் பேருந்து ஒன்றில் ஏறினோம். அடுத்த சில நிமிடங்களில் முதல் சோதனைச் சாவடியை அடைந்தோம். அங்கே நான் தலைமை நூலகரைச் சந்தித்தேன். பின்னர் நாங்கள் யுனெஸ்கோவின் வாகனத்தில் ஏறி நேராக நூலகத்திற்குச் சென்றோம். வழிநெடுகிலும் ஒவ்வொரு 100 மீட்டர் தூரத்திலும் இராணுவ வீரர்கள் துப்பாக்கிகளுடன் இருப்பதைப் பார்க்க முடிந்தது. அவர்கள் எங்களைப் பலமுறை நிறுத்தி, பயண ஆவணங்களைக் கேட்டனர். என்னுடைய இந்தியப் பாஸ்போர்ட்டைப் பார்த்தவுடன் மரியாதையுடன் நடத்தினர்.

பின் புதிதாக வெள்ளையடிக்கப்பட்டிருந்த பெரிய கட்டடத்தை அடைந்தேன். அது கடலிலிருந்து சில மீட்டர் தூரத்திலிருந்த யாழ்ப்பாணப் பொது நூலகமாகும். அப்போது உப்பு காற்று வெப்பமாக இருந்தது. நூலகக் கட்டடம் சமீபத்தில்தான் புதுப்பிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பொருளும் புதியனவாக இருந்தன. சீமைநூக்கு மரத்தில் செய்யப்பட்ட புதிய இருக்கைகள், புதிய கணினிகள், புதிய நூல்கள் என்று எல்லாமே புதியனவாக இருந்தன. அவர்கள் (நூலகப் பொறுப்பாளர்கள்) அப்போதுதான் நூலகத்திற்கான சாதனங்களைச் சேகரிக்கத் தொடங்கியிருந்தனர். குழந்தைகளுக்கான இலக்கியம், தொழில்நுட்பம், மருத்துவம், சமூக அறிவியல், அறிவியல் என அனைத்து பிரிவு துறைகளுக்கும் சென்றேன்.

நூலகத்தின் முன்புறத்தில் இருந்த சாலைகள், முற்றிலுமாக வெறிச்சோடிக் கிடந்தன. மதிய உணவிற்கு சென்றபொழுது அந்த சாலையையொட்டி இருந்த வீடுகள் அனைத்தும் குண்டுகளால் சேதப்படுத்தப்பட்டிருந்ததைப் பார்க்க முடிந்தது. பல வீடுகள் காலியாக இருந்தன. ஓடுகள் வேய்ந்த கூரைகள், சல்லடைத் துளைகளைப் போல துவாரங்களுடன் இருந்தன. என்னுடன் வந்த நூலகர், குண்டுகள் பாய்ந்த பல இடங்களைச் சுட்டிக் காட்டினார். குண்டு தாக்குதலின்போது மக்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள எப்படியெல்லாம் ஓடினார்கள் என்பதையும் விவரித்தார். எனக்கு யாழ்ப்பாண நகரைச் சுற்றி காண்பித்தார்கள். மாவட்ட நிர்வாக அலுவலகம், அழகான கோவில்கள் உள்ளிட்ட இடங்களையெல்லாம் பார்த்தேன். இறுதியாக நான் தங்கவேண்டிய இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன்.

நான் சந்தித்த ஒவ்வொருவரும் இதே விவரங்களைத்தான் கூறினார்கள். அவர்கள் எப்படி சில அங்குலத்தில் குண்டிலிருந்து தப்பித்தார்கள், குழந்தைகளையும் தங்களுடைய அன்புக்குரியவர்களையும் எப்படி காப்பாற்றினார்கள் என்ற விவரங்களை மிகுந்த வலியோடு பகிர்ந்துகொண்டனர். இவற்றையெல்லாம் கேட்டதன் ஊடாக அவர்களுடைய துயரம், கோபம், விரக்தி ஆகியவற்றில் பங்கு கொள்ள முடிந்தது. பிறகு, நூலகத்தில் நான் செய்ய வேண்டியிருந்த வேலையில் ஈடுபட்டேன். தமிழ்நாட்டில் ஏற்பட்ட நூலக இயக்கம் யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்கு பெரிதும் கடமைப்பட்டுள்ளது என்பதை நான் அங்கு இருந்தபோது தெரிந்துகொண்டேன். உலகில் உள்ள மிகச்சிறந்த தமிழ் நூல் சேகரிப்பை உண்டாக்கிய ரோஜா முத்தையாவை யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டது வேதனைக்குள்ளாக்கியது. அந்நூலகம் இழந்த நூல் சேகரிப்பைப் போன்றதொரு நூல் சேகரிப்பை உருவாக்குவதற்கான பணிகளில் மிகத் தீவிரமாக இறங்கினார். அவர் ஏற்கனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல காலமாக தனது சேகரிப்புப் பணியைத் தொடங்கியிருந்தாலும் இந்த நிகழ்விற்கு பிறகு படு தீவிரமாகப் பணிபுரிந்துள்ளார். அவருடைய சேகரிப்பின் விளைவாகவே, சென்னையில் உள்ள ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் பிரதான பகுதி உருவானது. ரோஜா முத்தையா பல தனிநபர்களைத் தமிழ்நூல் சேகரிப்பாளர்களாக உருவாவதற்கு ஊக்கப்படுத்தினார்.

எந்த அளவுக்கு யாழ்ப்பாண நூலகமும் அதனுடைய இழப்பும் யாழ்ப்பாண மக்களின் சிந்தனையில் இடம் பெற்றிருந்தது என்பது பற்றிய விவரங்களையும் கேட்டறிந்தேன். தங்களுடைய உயிருக்கு ஆபத்து என்ற நிலை இருந்த போதிலும் யாழ்ப்பாண மக்கள் அந்நூலகத்தை மறந்ததில்லை. அந்தநேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நூலகராகப் பணியாற்றிய திருமதி. பர. ராஜசிங்கம், அந்தப் பகுதியில் குண்டுகள் விழுந்து கொண்டிருந்தபோதும் பல ஆவணங்களைக் காப்பாற்றுவதற்கு எப்படி சிரமப்பட்டார் என்பது குறித்து அவரே என்னிடம் கூறினார். பல முக்கியமான ஆவணங்களைச் சாக்கு பைகளில் திணித்து அவற்றை டிரக் வண்டியில் எறிந்துவிட்டு தப்பித்து ஓடினார். ஒரு நாள் நான் தெருவில் நடந்து கொண்டிருந்தபோது வேட்டி கட்டிய முதியவரொருவர் என்னருகில் வந்தார். நான் யாழ்ப்பாணத்தில் இருப்பதற்கான காரணத்தை அறிந்தபோது, அவர் யாழ்ப்பாணப் பொது நூலகம் குறித்து விவரிக்க ஆரம்பித்தார். இந்த நூலகம் கோட்டைபோல நின்றிருந்த நாட்களைப் பற்றி பேசினார்; மேலும் பிரதான நூலகக் கட்டடத்தையொட்டியிருந்த திறந்தவெளி அரங்கத்தைப் பற்றியும் எனக்குக் கூறினார். மறுநாள் காலை நான் நூலகத்தின் மேல்தளத்திற்குச் சென்று பார்த்தேன். எதிரில் ஒரு பெரிய சுவரைப் பார்த்தேன். அது ஒரு சமயத்தில் திரைப்படங்களைத் திரையிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டதாகும். அதன் ஒவ்வொரு அங்குலத்திலும் குண்டுகளின் அடையாளங்களாக பெரிய துவாரங்களை ஏந்திக் கொண்டிருந்தது. இந்த நூலகம் மறுகட்டுமானத்திற்கு முன்பு எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பார்க்க மட்டுமே என்னால் முடிந்தது.

நான் யாழ்ப்பாணத்தில் சில சிறு கிளை நூலகங்களையும், நூல் சேகரிப்புகளையும் பார்க்கச் சென்றேன். அப்போது அந்தந்தப் பகுதி மக்களின் நூல் மற்றும் நூலகத்தின்மேல் கொண்ட ஆர்வம் சிறிதளவும் குறையாதிருப்பது தெரிந்தது. ஒவ்வொரு கிளை நூலகம் முழுவதும் இளைஞர்களும், பெண்களும் நிரம்பியிருந்தனர். அவர்கள் அனைவரும் அன்றாட வாசிப்பில் ஈடுபாடு கொண்டிருந்தனர். கிளை நூலகத்திற்கு வெளியே சைக்கிள் நிறுத்துமிடங்களில் பேரெண்ணிக்கையிலான சைக்கிள்கள் நிறுத்தப்பட்டிருந்தன. நான் இது குறித்து நூலகர்களிடம் கேட்டேன். அப்போது அவர்கள், இம்மக்கள் வாசிப்பில் மிகுந்த ஆர்வமாக உள்ளனர் என்றும் செய்தித்தாள்கள், நூல்களைப் படிப்பதற்கு அந்தந்தப் பகுதி நூலகங்களுக்குச் செல்கின்றனர் என்றும் தெரிவித்தனர்.

இந்தியாவிற்கு திரும்பிய பிறகு, நான் ஏற்கெனவே தீ வைக்கப்பட்ட மற்றும் தகர்க்கப்பட்டிருந்த ஏனைய நூலகங்கள் குறித்த தகவல்களைச் சேகரிக்கத் தொடங்கினேன். பொதுவாக, நூலகங்கள் ஒரு பண்பாட்டின் அடையாளமாகப் பார்க்கப்படுவதால் அவை குறிவைத்து தாக்கப்படுகின்றன. இது வரலாற்றில் பலமுறை நடந்த ஒன்று. யாழ்ப்பாணப் பொது நூலக எரிப்பில் நடந்ததும் இதுவேயாகும். இத்தகையதொரு முக்கியமான பண்பாட்டு மூலாதாரங்களைத் தீக்கிரையாக்குவது என்பது ஓர் இன மற்றும் மொழிவழிப்பட்ட மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டுவழி நினைவை அழிப்பதற்கான முனைப்பேயாகும். இலங்கையில் நிகழ்ந்த இந்த நிகழ்வின் சோகம் மிகக் கடுமையாக இருந்தது. ஏனெனில் யாழ்ப்பாண நூலகத்தின் அழிவு, தமிழ் மக்களின் சிந்தனைகளில் இப்போதும் மங்காமல் இருக்கிறது. இந்நிலையில் இலங்கை அரசு மற்றுமொரு பிரதான தாக்குதலைத் தொடங்கியது. இந்தமுறை அது, தமிழ் மக்களையே குறிவைத்தது.

யாழ்ப்பாணப் பொது நூலகத்தை - அதனுடைய நூல்களை, கையெழுத்துப் பிரதிகளை, பயனாளிகளை, வரலாற்றை - யாழ்ப்பாணத் தமிழ்ப் பண்பாட்டிலிருந்தும் இலக்கிய மேன்மையிலிருந்தும் பிரித்துப் பார்க்க இயலாது. யாழ்ப்பாணப் பொது நூலகம் என்பது ஓர் இயக்கமாகும். அது நீண்டகாலமாக நிலைத்து நிற்கின்ற தமிழ்ப் பண்பாட்டினையும், அதன் மாண்புகளையும் விடாது பேணிவந்ததாகும். யாழ்ப்பாண மக்கள் நூலகங்கள் மீதும் கல்வி மற்றும் அறிவாண்மை சார்ந்த பாரம்பரியம் மீதும் பெரும் மதிப்பு கொண்டவர்கள். பின்வரும் செவிவழிச் செய்தியில் இருந்து உலக நடப்புகள் மற்றும் இலக்கியத்தின்மீது யாழ்ப்பாண மக்கள் கொண்டிருந்த பற்றை அறியலாம்.

கடந்த காலத்தில், யாழ்ப்பாணத்தில் சுருட்டு தயாரிக்கும் புகையிலை நிறுவனங்கள் பல இருந்தன. ஒவ்வொரு நிறுவனக் கூடத்தின் மையத்திலும் ஒரு மேடை எழுப்பப்பட்டிருக்கும். வேலையாட்களில் ஒருவர் அதன் மீது உட்கார்ந்து கொண்டு செய்திதாளைச் சத்தமாக வாசிப்பார். செய்திதாள் வராத சில நாட்களில் பழைய செய்திதாள் மீண்டும் வாசிக்கப்படும். சில சமயங்களில் தொழிலாளர்கள் பத்திரிகையில் உள்ள குறிப்பிட்ட கட்டுரைகளைத் திரும்ப வாசிக்குமாறு கேட்பதுண்டு. செய்திதாள் வாசிக்கப்படும் நேரத்திலும் வேலை நடந்து கொண்டுதான் இருக்கும். செய்தித்தாளை வாசிக்கும் ஆர்வலரின் வாசிப்புப் பணிக்கு மிகுந்த மரியாதை அளிக்கப்பட்டது. எனவே அவருடைய சக தொழிலாளர்கள், அவரது வாசிப்பு நேரத்திற்கு ஈடு செய்யும் வகையில் அவரது வேலையைச் செய்து விடுவார்கள்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கியத்துறைத் தலைவர். வீ. அரசு அவர்கள் "இலங்கை, 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேற்கத்திய பண்பாட்டிற்கும் கிறிஸ்தவ மதப்பிரச்சாரர்களின் நடவடிக்கைகளுக்கும் ஆட்பட்டது. கிறிஸ்தவ மதப்பிரச்சாரர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக சைவசமய சித்தாந்தம் எழுந்தது. இதனால் கடுமையான போட்டி நிலவியது. இந்த நிலை தமிழர்களுக்குள் ஒரு கூட்டு உணர்வை உருவாக்கியது" என்று கூறுகிறார். அந்த உணர்வைப் பல வழிமுறைகளில் யாழ்ப்பாணப் பொது நூலகம் பிரதிபலித்தது.

யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் பலதரபட்ட பல்நோக்குடைய பண்பும், மாண்பும் மட்டுமே யாழ்பாண நூலகத்தின் பெருமைக்குக் காரணம் என்பதே நிதர்சனம். யாழ்ப்பாண மக்களின் மாண்புகளுக்கு யாழ்ப்பாண நூலகம் மிகுந்த கடமைப்பட்டுள்ளது. அவர்கள் வாழும் பகுதிகளின் வளர்ச்சிக்கு அனைத்து விதங்களிலும் முயற்சி எடுத்தனர். சாலைகள், மின்சாரம், அஞ்சல் அலுவலகங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், நூலகங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு பணம் மற்றும் மூலாதாரங்களைச் சேகரிப்பதில் முன் முயற்சி எடுத்தனர். மேலும், அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் வாக்களித்தனர். அரசாங்க அதிகாரிகள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொண்டனர். இந்தப் பண்பட்ட நிலைதான், யாழ்ப்பாணப் பொது நூலகத்தை நிறுவச் செய்தது. இந்தப் பண்பட்ட நிலைதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலகம் எரிக்கப்படுவதற்கும் குறிவைத்து தாக்கப்படுவதற்கும் காரணமாக இருந்தது.

யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் தோற்றமும், வீழ்ச்சியும் இலங்கைத் தமிழர்களின் சாதனைகளையும், இருமொழி இனங்களுக்குள் ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலையையும் நினைவுபடுத்தும் நிகழ்வுகளாகவே உள்ளன. கிறிஸ்தவ மதப்பிரச்சாரகர்கள், யாழ்ப்பாணத்திற்குப் பள்ளிகளைக் கொண்டு வந்தனர். அந்தப் பகுதி மக்கள், தங்களுடைய சொந்தப் பள்ளிகளை நடத்துவதற்கு இந்து மத வாரியம் ஒன்றை ஏற்படுத்தினர்.

பொது நூலகப் பயனாளி ஒருவர் "இதில் எந்தப் பொறாமையும் இருக்கவில்லை. ஆனால் ஆரோக்கியமான போட்டி இருந்தது" என்று நினைவுகூர்கிறார். பல இந்து மாணவர்கள் கிறிஸ்துவப்பள்ளிகளில் சேர்ந்தனர். பல இந்து ஆசிரியர்கள் அந்தப் பள்ளிகளில் பணியாற்றினர். இந்துப் பள்ளிகள் போட்டியை ஏற்படுத்தின. இதன் விளைவாக கல்வி ஆரோக்கியமான வளர்ச்சியைக் கண்டது. இந்தப் போட்டி அளித்த உற்சாகம், நூலகங்களுக்கும் விரிவடைந்தது. அந்தப் பகுதி மக்கள் தங்களின் நூலகங்களைத் தொடங்கினர். படிப்புக்கும் கல்விக்கும் அளித்த பெரும் மதிப்பு பயனளிக்கவே செய்தது.

அப்போதைய பிரிட்டிஷ் நிர்வாகம் அரசாங்க வேலைகளுக்கு தமிழர்களைத் தேர்வு செய்ய ஆரம்பித்தது. இவ்வாறு படித்த மத்தியதர வர்க்கம் தமிழர்களிடமிருந்து உருவானது. ஆனால் இது, பெரும்பான்மையினரான இலங்கை சிங்களவர்களிடம் பொறாமையை ஏற்படுத்தியது. தமது பெயரைக் குறிப்பிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்ட ஆய்வாளர் ஒருவர் "சிறுபான்மையினரான தமிழர்கள் அரசாங்க வேலைகளிலும் வழக்கறிஞர்களாகவும் ஒரு முக்கியமான பங்காற்ற முடிந்தது என்ற உண்மையைப் பெரும்பான்மையினரான சிங்களவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை" என்று கூறினார். யாழ்ப்பாணப் பொது நூலகம், புகழின் உச்சத்தில் இருந்தபோது சிங்களவர்களின் நூலகம் ஒன்று கூட இருக்கவில்லை. யாழ்ப்பாண நூலகம், சிங்களவர்களின் கண்களை உறுத்தின.

நூலகம் மற்றும் கற்றல் குறித்த கடந்தகால வரலாற்றுத் தகவல்களை என்னிடம் பலர் கூறினர். இதில் நான் ஒரு தகவலைக் கேட்டறிந்தேன். அது என்னவெனில் 15, 16 வயது சிறார்களுக்கான தேர்வு (இது முந்தைய பிரிட்டிஷ் முறையாகும்) மற்றும் ஏனைய தேர்வுகளுக்கு படித்துத் தயாராகுவதற்கு எப்படி இரண்டு அல்லது மூன்று மாணவர்கள் ஒரு படிப்பறையை வாடகைக்கு எடுப்பார்கள் என்பதைப் பற்றியதுதான். மாணவர்கள், தங்களுடைய தேர்வுக்கான நூல்களை விலைக்கு வாங்கமாட்டார்கள். மாறாக அவர்கள் தங்களுடைய தேவைகளுக்கு நூலகத்தையே பயன்படுத்துவார்கள். கல்லூரி காலத்திற்கு பின்னரும் தங்களது சொந்த உபயோகத்திற்கென நூல்களை அபூர்வமாகத்தான் வாங்குவார்கள். மாறாக, நூலகத்திற்காக நூல்களை வாங்குவார்கள்.

தனிப்பட்டவர்கள் சேகரித்த நூல்கள் ஏராளமானவை யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்கு நன்கொடைகளாக அளிக்கப்பட்டுள்ளன. உண்மையில், பொது நோக்கிற்காக நூல்கள் வழங்குவது என்பது யாழ்ப்பாணத்தின் பண்பட்ட நிலையின் ஒரு பகுதியாகியுள்ளது. ஓய்வுபெற்ற உதவி நூலகர் ஒருவர் கூறுகையில், தேர்வில் வெற்றி பெற்றுவிட்டால் மாணவர்களும் அவர்களுடைய தாய்மார்களும், நூலகம் முன்பு குவிந்து தமிழர்களின் பாரம்பரியமான சர்க்கரைப் பொங்கலைச் சமைத்து கல்வி தெய்வமான சரஸ்வதிக்கு படைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் நன்றியைத் தெரிவிப்பார்கள் என்று நினைவுகூர்கிறார். இந்தச் சடங்கு வழக்கமாக கோயிலில் செய்யப்படுவதாகும். மாணவர்களுக்கும் தாயார்களுக்கும் இந்த நூலகம், நூல்களைக் கொண்ட கட்டடம் என்பதற்கும் மேலாக ஒரு கோயிலாகவே கருதப்பட்டது.

**புதிய தேவைகள்**

இந்நூலகம் அதனுடைய பொற்கால நிலைக்கு இனி செல்லாமலே போகலாம். எனினும் யாழ்ப்பாணப் பொது நூலகத்தைப் பண்பாட்டிற்கும் கற்றலுக்குமான ஒரு தளமாக மாற்ற வேண்டிய பணி நம்மிடம் உள்ளது.

நூலகப் பணியாளர்கள், இந்நூலகத்தில் தற்போது நடைமுறையில் உள்ள அட்டையிலான நூற்பட்டியல் முறையே போதுமானது, எனினும் விரிவான நூற்பட்டியல் உண்டாவதற்கு கூடுதலான பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பது அவசியம் என்று கருதுகின்றனர்.

மேலும் இந்த நூலகம் தற்போது அதனுடைய நூற்பட்டியலையும் அரிய பொக்கிஷங்களையும் எண்ணிமப்படுத்த போதிய வசதிகள் இன்றியே உள்ளது. நூலகத்தில் நூல்களை ஒழுங்குப்படுத்தவும் அவற்றை எண்ணிமப்படுத்தவும் பெருமளவில் உதவி தேவைப்படுகிறது.

யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் நூல்கள் சேகரிப்பு தற்பொழுது பெரிய அளவிலேயே உள்ளது. இதற்கு தமிழ்நாடு அரசாங்கம் உள்ளிட்ட நிறுவனங்களும் தனிநபர்களும் அளித்த நன்கொடைகள் உதவிகரமானவையாக இருந்தன.

இந்நூலகத்தில் புனைக்கதைகள் மிகப் பெருமளவில் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆனால், ஏனைய பிரிவுகளில் நூல்கள் குறைவாகவே உள்ளன. குறிப்பாக, அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளில் சமீபத்திய பதிப்புகளை வாங்குவது ஒரு தேவையாகும். இப்போது இந்தப் பிரிவுகளில் முந்தைய பதிப்பு நூல்களே பெருமளவில் உள்ளன. இந்த நூலகத்தைப் பயன்படுத்தும் அறிவியல் மற்றும் மருத்துவ மாணவர்கள் தொடர்ந்து நூல்களை வாங்கும் திட்டத்தின் தேவையை வலியுறுத்துகின்றனர்.

மனித இயல்பு சார்ந்த மற்றும் சமூக அறிவியல்களைப் பொறுத்தவரையில் பழைய நூல்கள் அவைகளுக்கான சிறப்புகளைக் கொண்டுள்ளன. ஆனால், இதில் உள்ள பிரச்சினைகள் இரண்டு வகைப்பட்டதாகும். அவை புதிய நூல்கள் சேர்க்கப்பட வேண்டியதும், குறைவான எண்ணிக்கையில் உள்ள பழைய நூல்கள் பராமரிக்கப்பட வேண்டியதும் ஆகும்.

யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் நிர்வாகம், நூல்களைப் பராமரிப்பது குறித்த பயிற்சிப் பட்டறைகளும் சுவடிக்கூடம் சார்ந்த முறையான செயல்முறைகளும் தேவை என்பதைப் பல தருணங்களில் முன்வைத்துள்ளது.

இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் வெளிவரும் நூல்கள் ஓரளவுக்குதான் கிடைக்கப் பெறுகின்றன. பிற நாடுகளிலிருந்தும் நூல்களைச் சேகரிப்பதும் அவசியமாகும். இந்தப் பிரச்சனைக்கு தீர்வுகாண நூலகம் இணையதள இணைப்பு வசதியை அளிக்கிறது, ஆனாலும் இது மட்டும் போதுமானதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகத் தலைவரும் யாழ்ப்பாணப் பொது நூலக ஆலோசகருமான ஸ்ரீ காந்தலட்சுமி தெரிவித்த விபரங்களின்படி, தற்போதைய நூல் சேகரிப்பில் மிகப் பெரிய பிரச்சினை சேகரிப்பில் ஏற்பட்டுள்ள ஒழுங்கற்ற முறைதான்.

ஒரே நூல் தலைப்பில் பல படிகள் உள்ளன. சில நூல்கள் 10 படிகள் வீதம் இருக்கின்றன. மேலும் என்னென்ன நூல்கள் யாழ்ப்பாணப் பிராந்தியத்திற்கு மிகவும் ஏற்றவை என்பது குறித்தும் நூலகப் பயனாளிகளுக்குத் தேவைப்படும் நூல்கள் குறித்தும் தரமான மதிப்பீடு இல்லை. மேலும், தற்போதைய நூலகத்தின் சுற்றுச்சூழலும் வடிவமைப்பும் கட்டடத்திற்குள் பயனாளிகளின் வாசிப்பையும் ஆய்வையும் ஊக்கப்படுத்தக்கூடியதாக இல்லை என்றும் ஸ்ரீ காந்தலட்சுமி சுட்டிக் காட்டுகிறார். வாசகர்களை ஊக்கப்படுத்தும் விதமாக அவர்களிடம் மாற்றுசிந்தனையை ஏற்படுத்தவும் தற்போதைய இடத்தை மாற்றி அமைக்கவும் நூலகத்திற்கு வழிகாட்டல் தேவைப்படுகிறது.

குழந்தைகளுக்கான நூல் பிரிவில் சில முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அந்தப் பிரிவுக்கு புதிய இருக்கை வசதிகளும் ஆங்கில நூல்களும் கிடைத்துள்ளன. இது இளம் வாசகர்கள் நூல்களை மகிழ்வுடன் விளையாட்டாகப் படிக்கவும் புத்தாய்வு செய்யவும் ஊக்கப்படுத்துகிறது. நூலக உறுப்பினர்களுக்காக சர்வதேச திரைப்படங்களைத் திரையிடுவதற்கும் நவீன ஒலி, ஒளி கருவிகள் கொண்ட பகுதியை அமைக்கவும் யாழ்ப்பாண நூலகம் விரும்புகிறது.

ஸ்ரீகாந்தலட்சுமி மேலும் கூறுகையில், யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் பழைய நிலைமையைப் பயனுள்ள முறையில் மீண்டும் கொண்டு வருவதற்கு எடுக்கப்பட வேண்டிய முக்கியமான நடவடிக்கை அந்நூலகத்தின் அரிய நூல்கள் சேகரிப்பை மேலும் வலுப்படுத்துவதுதான் என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கு தமிழ்நாட்டின் சரஸ்வதி மஹால் நூலகம், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் போன்ற நூலக நிறுவனங்களுடன் சேர்ந்து செயல்படுவது தேவையாகும். எனினும் இந்தப் புதிய சேகரிப்புகளின் பாதுகாப்பிற்கும் எந்த ஒரு உத்திரவாதமும் இல்லை.

**இரங்கற்பா**

யாழ்ப்பாணத்திற்கு வெளியேயிருந்து வந்தவை உள்ளிட்ட பல நூல் தொகுப்புகளும் இலங்கையில் நடந்த இனமோதல்கள் காரணமாக அழிந்து போயின. இலங்கைச் சிறுபான்மையினர் தங்களுடைய தனித்துவத்தைத் தக்க வைத்துக்கொள்ள ஒரு போராட்டத்தை எப்பொழுதும் எதிர்கொண்டபடியே இருக்கின்றனர். இத்தகைய சூழலில் தமிழர்கள் தங்களுடைய நூலக இயக்கத்தை இணையத்தளத்தில் மேற்கொண்டனர்.

அரிய தமிழ் ஆவணங்களை இணையத்தில் பதிவேற்றம் செய்வதற்கான ஒரு பெரும் தன்னார்வ முயற்சி உண்டானது.

கட்டடமாக உள்ள நூலகங்கள் தீக்கிரையாக்கப்படலாம். இணையதள நூலகங்களை எரிக்க முடியாது. இந்த முயற்சிக்கு வழிகாட்டுவதற்கு நூலகம் (www.noolaham.org) உருவானது; இந்தச் சுயமுயற்சி கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் ஏனைய நாடுகளிலிருந்து பங்களிப்பு செய்யும் ஆர்வலர்களுடையதாகும்; மேலும், இந்த இணையதள நூலகம் இலங்கை தமிழ் வளவாய்ப்புகளில் மிகப் பெரிய களஞ்சியமாக உள்ளது. இதன்மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய யாழ்ப்பாண நூலகத்தின் உத்வேகம் தொடர்கிறது.

என்றாலும் இழக்கப்பட்டவை அனைத்தையும் மீண்டும் பெறுவது என்பது சாத்தியமில்லை.

மறைந்த தமிழ்ப்பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, "தமிழர்கள் ஒரு அறிவாண்மை மிக்க பாரம்பரியத்தை இழந்துவிட்டனர்" என்று ஒரு முறை கூறினார். பேராசிரியர் வீ. அரசு நமக்கு நினைவுபடுத்தியதைப் போல "மிக மிக அரிய மற்றும் பழமையான நூல்கள் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் மட்டுமே இருந்தன. அங்கிருந்த பல நூல்களின் படிகள் வேறெங்கும் இல்லாதவை. அந்த நூலகம் தீக்கிரையானதுடன் அவையும் நிரந்தரமாக அழிந்துவிட்டன" என்று கூறினார். உண்மையில் பல நோக்குகளில் யாழ்ப்பாணப் பொது நூலகம் அரசே இல்லாத ஒரு தமிழ்தேசத்திற்கான தேசிய நூலகமாக இருந்தது.

இந்த இழப்பைப் பலர் பதிவு செய்துள்ளனர். ஜூன், 2001இல் என். செல்வராஜா யாழ்ப்பாண நூலகம் தீக்கிரையானது பற்றிய அவரது கட்டுரைகளின் தொகுப்பை வெளியிட்டார்; அதன் தலைப்பு "யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு" என்பதாகும். பின் நாட்களில் 2008இல் சோமீதரன், எரியும் நினைவுகள் என்ற குறும்படத்தைத் தயாரித்து வெளியிட்டார். அக்குறும்படம் இடிக்கப்பட்டது என்ன என்பது பற்றியும் அது குறித்த யாழ்ப்பாண மக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்புகள் பற்றியும் நினைவுபடுத்துகிறது.

அந்தக் குறும்படத்தில் பேராசிரியரும் கவிஞருமான நுஹ்மான் எழுதிய உணர்வுமிகு தமிழ்க்கவிதை மேற்கோள்காட்டப்பட்டுள்ளது. அந்தக் கவிதை இதோ!

**புத்தரின் படுகொலை**

நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.
இரவில் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
'எங்கள் பட்டியலில் இவர்பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?'
என்று சினந்தனர்.

'இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஓர் ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையினால்...'
என்றனர் அவர்கள்.
'சரி சரி
உடனே மறையுங்கள் பிணத்தை'
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.

சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோவாத சூத்திரத்தினைக்
கொளுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான் சாம்பலானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சுந்தர் கணேசன்**

பழமையான தமிழ் நூல்களைச் சேகரிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். சென்னை, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் இயக்குநர், வரலாற்றுத் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். உலக அளவிலான நூலகங்கள் குறித்து ஆராய்ந்து பல்வேறு கட்டுரைகள் எழுதியுள்ளார்.

யாழ்ப்பாண நூலகத்தின் துவக்கம் தமிழின் எழுச்சியைச் சுட்டுவதாய் இருந்ததெனில், அதனை எரியூட்டிய நிகழ்வை, மறைந்த தமிழ்ப் பேராசிரியர் கார்த்திகேசு சிவதம்பியின் வார்த்தைகளில் சொல்வதென்றால்,"தமிழர்கள் அறிவாண்மை மிக்கதொரு பாரம்பரியத்தை இழந்துவிட்டனர்." இது மிகத் துல்லியமாக ஒட்டுமொத்த இலங்கைத் தமிழர்களின் மனத்துயரை வெளிப்படுத்தியது. அந்தச் சோக நிகழ்வின் எதிர்வினையை விளக்குகிறது இந்த இரங்கற்பா.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலகம்

விலை: ரூ. 50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org